விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 035 வள்ளுவர் ஆண்டு 2055 தை 09 செவ்வாய்க்கிழமை (23.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= கட்டணம்

## அயோத்தி இராமர் கோவில் கும்பாபிஷேகம்



08

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்; நீதிமன்றை நாடிய எதிர்க்கட்சி

15ஆம் பக்கம் பார்க்க

மாத்தறை – பெலியத்தையில்

## துப்பாக்கிச் சூடு ஐவர் உயிரிழப்பு



- எங்கள் மக்கள் கட்சித் தலைவர் உயிரிழப்பு.
- தென்னிலங்கையில் பயங்கரம்.
- விசாரணை செய்ய 6 விசேட பொலிஸ் குழு நியமனம்.

(03ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வை வழங்க வலியுறுத்தவே முடியும்

### தமிழ்த் தலைவர்களிடம் இந்திய உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்குமாறு எம்மால் வலியுறுத்த மட்டுமே முடியும் என இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் நேரில் தெரிவித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூஷணிக்கு நாளை கும்பாபிஷேகம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூஷணி அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை இடம் 15

## உரிய காலத்தில் தேர்தல் இடம்பெறும்

### ஜேர்மன் தூதுவரிடம் நீதி அமைச்சர்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் உரிய காலத்தில் இடம்பெறவுள்ளது. அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழலை கட்டுப்படுத்த தேவையான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 15

கோப்பாயில்

## கசிப்புடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி பகுதியில் உள்ள மரக்காலையில் நேற்று திங்கட்கிழமை கசிப்புடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட் 15

## தமிழ் மக்களுக்காக உங்களை முழுமையாக அர்ப்பணியுங்கள்

### ஆசி பெறச் சென்ற சிறீதரனிடம் சம்பந்தன்

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அக்கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தனை நேற்று நேரில் 15



நாவற்குழியில்

## பெண்ணின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் நேற்று திங்கட் கிழமை பெண் ஒருவர் அவரது வீட்டில் 15

NLB
நீங்கள் இராசாவாக
25 இலட்சம் பரிசுகள்
மில்லியன் பரிசுகள்
மஹஜன சம்பத
MAHAJANA SAMPATHA
ரூ.100,000
இலட்சம் பரிசுகள் 60 இற்கும் அதிகம்
ஜனவரி 31
பரிசு
சீட்டிழுப்பு
கைச்சங்கிலி, தங்க காசுகள் மற்றும் பரிசு வவுச்சர்கள்
சீட்டிழுப்பு ஜனவரி 30
(C-2222)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மணிவிழா வாழ்த்துக்கள்



திருமதி
**கிளறன்ஸ் ஜெயமோகன் மேரியோகராணி**
SLTS-I
(சிரேஷ்ட ஆசிரியை
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்)

அகவை அறுபதில் கால் பதித்து
மணிவிழா கொண்டாடும் – எம்
மகத்தான நாயகிக்கு
மணிவிழா வாழ்த்துக்கள்
மாணவசெல்வங்களை
மகிழ்வூட்டி கற்பிப்பதில்
உங்களுக்கு இல்லை இணை! – தங்கள்
ஓய்வுக்காலம் சிறக்க, மகிழ்ச்சிகள் பெருக
இறையாசி வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

சேவைவிபரம் ஆசிரியப்பணி
28.03.1990 - 31.05.2003
யா/உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை
01.06.2003 - 17.10.2006
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
18.10.2006 - 16.10.2015
யா/உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை
17.10.2015 - 22.01.2024
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

(C-8190)

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்

# அயோத்தி இராமர் ஆலய

## மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் விசேட ஆராதனை



அயோத்தி இராமர் ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் அகில இலங்கை சிவசேனை ஏற்பாட்டில் நேற்று விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

இந்தியத் துணைத் தூதரக உயர் அதிகாரி நாகராஜன் அவர் துணைவியாருடன் பூஜை வழிபாட்டில் கலந்து சிறப்பித்திருந்தார். (ம-7)

# பொலிஸாரின் நடவடிக்கைகளால் உயிரிழப்பவர்கள் அதிகரிப்பு

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் இந்த விடயம் குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிலநாட்களிற்கு முன்னர் நாரம்மலவில் இடம்பெற்ற சம்பவத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

குற்றச்செயல்களிற்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் விதம் குறித்து விமர்சனங்கள் வெளியாகியுள்ள போதிலும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அதனை தொடர்வதில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதைப் பொருள் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களிற்கு எதிராக அவசியமான சட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இவற்றை உரிய சட்ட நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. (ம-7)

# அறிவித்தல்

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்திற்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக ஆளுகைக்குட்பட்ட வட்டாரம் 1 (கிராமசேவகர் பிரிவுகள் J/150, J/151, J/152)வட்டாரம் 2 (கிராமசேவகர் பிரிவுகள் J/154, J/155) வட்டாரம் 3 (கிராமசேவகர் பிரிவுகள் J/153, J/156 )வட்டாரம் 8 (கிராமசேவகர் பிரிவு J/144) ஆகிய பிரிவுகளிலுள்ள ஆதனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மீள்வரி மதிப்பீட்டு நிரலானது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகலில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. வரியிறுப்பாளர்கள் 01.02.2024 ஆம் திகதிவரை பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தமது

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
(C-8191)
23.01.2024

# புத்தளத்தில் இனந்தெரியாத நபரின் சடலம் மீட்பு

(புத்தளம்)

புத்தளம் - மதுரங்குளி களப்பு பிரதேசத்தில் இருந்து இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் பேரில் அங்கு சென்ற பொலிஸாரும், புத்தளம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு களப்புப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம், நீதவான் விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மதுரங்குளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.(ம-7)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **முருகையா நகுலேஸ்வரன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)
திதி : திரயோதசி

ஈராண்டென்ன?
ஈராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்கள் எம் நெஞ்சங்களில்
நிலையாய் வாழ்வீர்கள் ஐயா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(18726)

தோற்றம் 1941.01.21
மறைவு 2022.01.15

இல.185/1,
கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,


**லங்கா மஹால்(PVT) LTD**
உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை



லண்டன் - 925/=
பிரான்ஸ் - 1800/=
ஜேர்மனி - 1700/=
கனடா - 2150/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2050/=
இந்தியா - 990/=
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(18728)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION MoneyGram. Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
வீதி, யாழ்ப்பாணம்.
077 8393 974


# மின்சார வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

## இருவர் கைது

(புத்தளம்)

புத்தளம் கல்லடி பகுதியில் யானையொன்று மின்சார வேலியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த காட்டு யானை சட்டவிரோதமாக பொருத்தப்பட்டிருந்த அதிவலு கொண்ட மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த காட்டு யானை சுமார் 8 அடி உயரமுடைய 30 வயது மதிக்கத்தக்கதென வனஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவடைந்த மரக்கறி விலைகள்



(கொழும்பு)

சந்தையில் மரக்கறிகளின் விலை கடந்த 5 நாட்களில் 40 வீதத்தால் குறைவடைந்துள்ளதாகவும் அதேநேரம், இந்திய முட்டை ஒன்றின் விலை 8 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நுகர்வோர் மரக்கறிகளை கொள்வனவு செய்வதை தவிர்த்து பதிலீட்டு உணவுகளை நாடியமையால் மரக்கறிகளின் விலை குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளதுடன் கடந்த சில நாட்களாக சந்தையில் 2,500 ரூபாவாக காணப்பட்ட கரட் ஒரு கிலோகிராமின் விலை தற்போது 800 ரூபா வரை குறைந்துள்ளதையும் சுட்டிக்காட்டினார். (நி)

# இலங்கைத் தமிழ் மக்களுக்கு கனடா எப்போதும் துணை நிற்கும்

## கனடா பிரதமர் உறுதி

(ஒட்டாவா)

**இலங்கையில் தொடர்ந்தும் மனித உரிமைகள் சவால்களுக்குட்பட்டு வருவதாகவும் தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உறுதியளித்துள்ளார்.**



தைப்பொங்கல் நிகழ்வொன்றில் பங்கேற்ற போதே அவர் இந்த கருத்துக்களை குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், 1983ஆம் ஆண்டு இலங்கையில் வன்முறைகள் ஆரம்பித்த காலத்தில் தமது தந்தையாரின் தலைமையிலான லிபரல் கட்சி 1800 இலங்கை தமிழர்களை கனடாவில் குடியேற்றியது.

இந்த தொகை கடந்த பல தசாப்தங்களில் அதிகரித்து இன்று புலம் பெயர்ந்த தமிழர்கள் அதிகமாக வசிக்கும் நாடாக கனடா பார்க்கப்படுகிறது.

அத்துடன் கனடாவின் வளர்ச்சிக்கு தமிழர்களின் பங்களிப்பு வியக்கத்தக்கது.

இதன் காரணமாகவே 2016ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தை தமிழர் வரலாற்று மாதமாக கனேடிய அரசாங்கம் பிரகடனம் செய்தது.

இந்த நிலையில் இலங்கை தமிழர்களின் நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கனடா தொடர்ந்தும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் ஏனைய அமைப்புக்களுடன் செயற்பட்டு வருகிறது.

அத்துடன் வேறு எந்த நாடும் நடைமுறைப்படுத்தாத வகையில் இலங்கை தமிழர்களின் மனித உரிமைகளுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கனடா தடை விதித்துள்ளது.

இந்த செயற்பாடுகள் தொடரும், தமிழ் சமூகத்துடன் கனடா தொடர்ந்தும் பயணிக்கும் என்று கனேடிய பிரதமர் உறுதியளித்துள்ளார். (நி)

# சம்பந்தனை சந்தித்தார் சிறீதரன்



(திருமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள சிறீதரன், அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை சந்தித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் புதிய தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில் வெற்றிபெற்ற நிலையில் அவர் நேற்று காலை இரா.சம்பந்தனை கண்டு ஆசிபெற்றுக் கொண்டார். (நி)

# எதிர்வரும் தேர்தல் எமக்கான இறுதிச் சந்தர்ப்பம்

## நழுவ விடாதீர்கள் என்கிறார் மகாநாயக்க தேரர்

(கொழும்பு)

அடுத்துவரும் தேர்தல் நாட்டை பாதுகாத்துக்கொள்ள கிடைத்த இறுதி சந்தர்ப்பமாகும். அதனால் அரசியல் வாதிகளிடம் தொடர்ந்து ஏமாறாமல் உண்மையாக சேவை செய்யக்கூடிய சிலரை தெரிவு செய்து நாட்டை கட்டியெழுப்ப தயாராக வேண்டும் என மிஹிந்தலை மகாநாயக்க தேரர் வளவாஹெங்குணவெவே தம்மரத்ன தெரிவித்தார்.

நாட்டின் எதிர்கால நிலைமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

நாட்டை ஆட்சி செய்யப்போறவர் யார் என்பது எமக்கு முக்கியம் இல்லை. அதே போன்று எந்தக் கட்சி ஆட்சி செய்யப்போகிறது என்பதும் எமக்குத் தேவையில்லை.

எமது நாடே எமக்கு முக்கியம். அதனால் தற்போது எங்களுக்கு கதைத்துக் கொண்டிருக்க நேரம் இல்லை. அதே போன்று போராட்டம் செய்யவோ ஹர்த்தால் மேற்கொள்ளவோ எமக்கு தேவை யில்லை.

தற்போது எமக்கு தேவையாக இருப்பது, சிறந்த சிந்தனையும் இலக்கும் உள்ள இளைஞர்களாகும். நூற்றுக்கு ஆயிரம் இன்று ஆட்சியாளர்கள் மக்கள் பக்கம் இல்லை. அதனால்தான் ஆட்சியாளர்கள் கிராமங்களுக்கு செல்லும்போது அந்த பிரதேச மக்கள் அவர்களை விரட்டுகின்றார்கள்.

எதிர்வரும் தேர்தல் எமக்கு இறுதி சந்தர்ப்பமாகும். இதனை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தாவிட்டால் எமக்கு இனிஒரு போதும் சந்தர்ப்பம் கிடைக்காது.

அதனால் நாட்டு மக்கள் அனைவரும் இந்த அரசியல் வாதிகளுக்கு ஏமாந்ததுபோதும் இனியும் ஏமாறக்கூடாது. அதனால் சிறந்த இளைஞர்கள் குழுவை இணைத்துக் கொண்டு நாட்டை பாது காக்கும் நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ள வேண்டும். அதனை எங்களால் செய்ய முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# அநாமதேய அழைப்புகளால் ஆபத்து

## எச்சரிக்கை விடுக்கும் பொலிஸார்

(கொழும்பு)

இலங்கையில் சில மோசடி குழுக்கள் வீடுகளுக்கு தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தி தங்களை பொலிஸார் என கூறி பணம் கேட்டு மோசடியில் ஈடுபடுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முல்லேரிய மற்றும் நவகமுவ பொலிஸ் நிலையங்களுக்கு இவ்வாறான சம்பவங்கள்.தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இது திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படும் மோசடி எனவும் அவர் தெரிவித்தார்.

தாங்கள் குற்றச்செயலுக்கு தொடர்புபட்டுள்ளதாகவும் தாங்கள் கைது செய்யப்பட வுள்ளதாகவும் கூறி அழைப்பேற்படுத்தும் நபர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் ஒரு போதும் கைது செய்யப்படும் நபர்கள் தொடர்பில் தொலைபேசியில் அழைப்பேற்படுத்தி கூறுவதில்லை.இதனால் இவ்வாறான அழைப்புகள் கிடைத்தால் உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு சென்று முறைப்பாடு செய்யுமாறு பொது மக்களிடம் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ கேட்டுக்கொண்டுள்ளார். (நி)

# பெலியத்தையில் துப்பாக்கி சூட்டு சம்பவம் அரசியல்வாதி உட்பட ஐவர் உயிரிழப்பு

## தென்னிலங்கையில் பயங்கரம்

(கொழும்பு)

தங்காலையில் டிபெண்டர் வாகனத்தில் பயணித்தவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக வீதியின் பெலியத்த பகுதியில் உள்ள வெளியேறும் பகுதியில் நேற்று காலை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்து வாகனத்தில் பயணித்த ஐவரில் நால்வர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன் ஒருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த ஐவரில் எங்கள் மக்கள் கட்சி என்ற அரசியல் கட்சியின் தலைவர் சமன் பெரேராவும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மற்றுமொரு வாகனத்தில் வந்த குழுவினரால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மன்னார் சுப்பர் லீக்; வீரர்களுக்கான ஏல நிகழ்வு




மன்னார் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தினால் நடத்தப்படவுள்ள மன்னார் சுப்பர் லீக் சுற்றுத் தொடருக்கான வீரர்களை கொள்வனவு செய்யும் ஏல நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மன்னார் ஆஹறாஷ் தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சுப்பர் லீக் சுற்று போட்டியில் மன்னார் மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்தி கலந்து கொள்ளும் 6 அணிகளுக்குமான சீருடைகளும் அறிமுகம் செய்யப்பட்டதுடன் வெற்றி கிண்ணமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த சுற்று போட்டியில் கலந்து கொள்ள 111 துடுப்பாட்ட வீரர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில் அவர்களில் 72 வீரர்கள் போட்டிக்காக உள்வாங்கப்பட்டு ஏலத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டனர்.

இச்சுற்று தொடரின் லீக் சுற்றில் 15 போட்டிகள் இடம் பெறவுள்ளதுடன், இரண்டாவது சுற்று பிலே ஓப் சுற்றாக இடம்பெற்று இறுதிப்போட்டி இடம்பெறவுள்ளது. மன்னார் பைட்டர்ஸ், மன்னார் ரோயல்ஸ், மன்னார் சுப்பர் விங்க்ஸ், மன்னார் புல்லட்ஸ், மன்னார் ரைடர்ஸ் மன்னார் பிலாஸ்டஸ் ஆகிய ஆறு அணிகள் கலந்து கொள்ளும் குறித்த சுற்று தொடரில் முதல் இடம் பெறும் அணிக்கு 250,000ரூபாய் பணப் பரிசும் இரண்டாம் இடம் பெறும் அணிக்கு 150,000 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. அதேநேரம் ஒவ்வொரு போட்டியிலும் ஆட்டநாயகன் தெரிவு செய்யப்படவுள்ளதுடன், முழு சுற்று தொடருக்குமான சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த துடுப்பாட்டகாரர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-285)

## நடிகை சனா ஜாவித்தை திருமணம் செய்த சொயிப்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் சொயிப் மாலிக் பாகிஸ்தான் நடிகை சனா ஜாவித்தை திருமணம் செய்து கொண்டார். இது தொடர்பான புகைப்படங்களை சொயிப் மாலிக் எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். இவை சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவை திருமணம் செய்து இஷான் என்ற மகன் உள்ளார். ஆனாலும் இவர்களது திருமண வாழ்க்கை நீடிக்கவில்லை.

சொயிப் மாலிக்-சானிய மிர்சா ஜோடி முறைப்படி விவாகரத்து செய்து விட்ட நிலையில் பாகிஸ்தான் நடிகை சனா ஜாவித்தை திருமணம் செய்து கொண்டுள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3021

Search for people, places and things

### கார்த்தி




### ராஜி




### மகிஷினி




### லக்சுமி




### வானதி




### தனுசா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்திற்கு எதிராக மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



(மட்டக்களப்பு)

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் என்பனவற்றை மீளப் பெறுமாறு வலியுறுத்தி மட்டக்களப்பில் மாபெரும் கவன ஈர்ப்பு பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூக அமைப்புகளால் குறித்த கவனயீர்ப்பு மற்றும் அடையாள உண்ணாவிரத போராட்டம் என்பன முன்னெடுக்கப்பட்டன. (நி)

# சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர (2023/2024) பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி இன்று முதல் பெப்ரவரி 15ஆம் திகதி வரை இணையத்தளம் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் கோரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றவுள்ள சகல பாடசாலை விண்ணப்பதாரிகள் பாடசாலை அதிபர் ஊடாகவும் அதே வேளை தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை முறைமை மூலம் விண்ணப்பங்களை சமர்பிக்குமாறும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

# வாகனம் கைமாறினால் உரிமம் மாற்றப்பட வேண்டும்

## இல்லாவிட்டால் அபராதம்

(கொழும்பு)

வாகனம் ஒன்றை கொள்வனவு செய்து 14 நாட்களுக்குள் உரிமையை தங்கள் பெயருக்கு மாற்றாவிட்டால் 2000 ரூபாய் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து ஆணையாளர் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார் .

வாகனம் ஒன்றை கொள்வனவு செய்யும் சிலர் நீண்ட காலமாக வாகனத்தின் உரிமையை மாற்றாமல் இருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாகனங்களின் உண்மையான பதிவு உரிமையாளரை கண்டுபிடிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் வேறு ஒருவரிடமிருந்து வாகனம் ஒன்றை கொள்வனவு செய்தால் அதை உடனடியாக அவரது பெயரில் பதிவு செய்ய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# இணையப் பாதுகாப்புச் சட்டமூலம்; பாராளுமன்றத்தில் விவாதம்

(கொழும்பு)

உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் இன்று மற்றும் நாளை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த புதிய சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தொழில்முறை ஊடகவியலாளர்களின் ஒன்றியம் மற்றும் சுதந்திர பத்திரிகை இயக்கம் ஆகியன கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

மக்களின் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி ஜனநாயக உரிமைகளை நசுக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளை கூட்டாக தோற்கடிக்க வேண்டும் என குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தல்களில் வெற்றியீட்டுவதற்கான இலக்குகளை எட்டுவதற்காகவே அரசாங்கம் ஒடுக்குமுறைச் சட்டமூலங்களை நிறைவேற்ற முற்படுவதாக தொழில்முறை ஊடகவியலாளர்களின் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த சம்பத் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த சட்டமூலம் பரிசீலிக்கப்படும் போது, அதில் பல திருத்தங்கள் உள்ளடக்கப்படும் என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் அண்மையில் இந்த சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்களின் வரிப்பணத்தில் சவாரி செய்யும் ஜனாதிபதி

## எதிர்க்கட்சித் தலைவர் கொந்தளிப்பு

(கொழும்பு)

மக்கள் படும் இன்னல்களை எண்ணாமல் மக்களின் வரிப் பணத்தில் நாட்டின் தலைவர் சவாரி செய்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாரம்மல நகரில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் ஜனாதிபதியாக 17 மாதங்களில் 18 வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

மக்களை பலிகடாக்கி மக்கள் படும் துன்பங்களையும் வலிகளையும் கருத்தில் கொள்ளாமல், வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகை போதாமையினால் மேலும் 200 மில்லியன் ஒதுக்கிக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க - ராஜபக்ஷ நட்பு வட்டார முதலாளித்துவத்தை கடைப்பிடித்து வருகிறார்.

மக்களிடமிருந்து அறவிடப்படும் வரிப்பணம் ஊழல் மற்றும் மோசடி மூலம் திருடப்படுகின்றது.

இந்த பொருளாதார பயங்கரவாதத்தில் இருந்து நாட்டை காப்பாற்ற ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும். இதன் மூலம் நாட்டின் வங்குரோத்து நிலை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் நீதி நிலைநாட்டப்படும்.

தற்போதைய அரசாங்கம் முட்டாள்தனமான கொள்கைகளால் நாட்டை அழித்து வருகிறது. நட்பு வட்டார முதலாளித்துவத்தை பின்பற்றும் இந்த அரசாங்கம் மக்கள் சக்தியினால் விரட்டியடிக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

23.01.2024
தை 09, செவ்வாய்க்கிழமை
திரயோதசி முன்னிரவு 9.59 மணிவரை
மிருகசீரிடம் காலை 6.40 மணிவரை

சுபநேரம் -11.06-12.36 மணிவரை
இராகுகாலம்-3.36-5.06 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
விசாகம்.

வளவன்

**மேஷம்** உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

எதிரியை வி[illegible] அடக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு நேற்று காலை பக்திபூர்வமாக ஆரம்பமான எண்ணெய்க்காப்பு சாற்றும் நிகழ்வு இன்று மாலை வரை இடம்பெறும். அதனை தொடர்ந்து நாளை [illegible] புதன்கிழமை காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். (படங்கள்: சிவசாந்தன்)

# நெல்லை நிர்ணய விலைக்கு

## விற்கமுடியாமல் திண்டாடும் விவசாயிகள்

(தருமபுரம்)

**அறுவடை செய்த நெல்லினை நிர்ணய விலைக்கு விற்க முடியாது திண்டாடும் விவசாயிகள்.**



கிளி மாவட்டத்தில் பெரும் போக அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் ஒரு ஏக்கருக்கு 5 முதல் 6 நெல் மூடைகளே கிடைக்கப் பெறுவதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடந்த வருடம் ஒரு ஏக்கருக்கு 1 முதல் 25 இற்கு மேற்பட்ட நெல் மூட்டைகள் அறுவடை மேற்கொள்ளப்பட்டநிலையில் தற்போது மூடைகளின் அளவு குறைவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அறுவடையான நெல் மூடைகளை இடைத்தரகர்கள் குறைவான விலையிலே கொள்முதல் செய்கின்றனர்.

பல நெருக்கடிகளுக்கு மத்தியில் நெல்லினை பயிரிட்டு அதற்கான பிரதிபலனை எதிர்பார்க்கும் சமயத்தில் நிர்ணய விலைக்கு நெல்லினை விற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன் பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல் அரசும் இயற்கையும் தம்மை வஞ்சிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (நி-6-316)

# யாழ்.பல்கலையில்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறையும் தென்னிந்தியா - தமிழ்நாடு பாளையங்கோட்டைத் தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் ஆய்வு மையமும் இணைந்து 'தமிழ்க் கிறித்தவக் கலை உலகங்கள்' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கினை ஜனவரி மாதம் 29 முதல் 31 வரை யாழ். பல்கலைக் கழகத்தில் நடத்த திட்டமிட்டுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நிகழும் அங்குரார்ப்பண நிகழ்வில் அருட்தந்தை ஜெயசீலன் "தமிழ் கிறித்தவக் கலைகள்" என்ற தலைப்பிலும் மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாளரும் கட்டடக்கலைஞருமான சாகர ஜெயசிங்க "வட இலங்கையின் 19 ஆம் நூற்றாண்டுக் கட்டடக்கலையையும் ஆராய்தல்" என்ற தலைப்பிலும் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்விற்கு முன்னராக, அதே தினம் மாலை 3.00 மணிக்கு "பண்பாட்டு ஒட்டு" என்ற தலைப்பிலமைந்த வட இலங்கைத் தேவாலயங்கள் பற்றிய ஒரு காட்சியும் நுண்கலைத்துறையின் கலைக்கூடத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

தொடர்ந்து 30ஆம் மற்றும் 31ஆம் திகதிகளில் [illegible] அமர்வுகளில் ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்படவுள்ளன (நி-6-33)

## மரண விசாரணை அதிகாரி நியமனம்

(கரணவாய்)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கான திடீர் மரண விசாரணை அதிகாரியாக சதானந்தம் சிவராஜா கடந்த புதன் கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

நீதி மற்றும் சிறைச்சாலை அரசியல் மறுசீரமைப்பு அமைச்சினால் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கான நியமனம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-60)

## மாவை கந்தனுக்கு திருமஞ்சம் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம் )

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோவிலில் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற 24 அடி உயரம் கொண்ட திருமஞ்ச வெள்ளோட்டம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை தைப்பூச திருநாளன்று மாலை 6 மணிக்கு மாவைக்கந்தன் புதிதாக நிர்மாணிக்கப்பெற்ற திருமஞ்சத்தில் பவனி வருவார் எனவும் இரண்டு தினங்களிலும் முருகப் பெருமான் அடியவர்கள் வடம் பிடித்து அருளைப் பெறுமாறு ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (நி-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 650 | 750 | 450 | 600 | 650 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 200 | 180 |
| பச்சைமிளகாய் | 900 | 1000 | 900 | 1000 | 900 |
| தக்காளி | 600 | 500 | 550 | 600 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 140 | 150 | 100 |
| கோவா | 800 | 450 | 600 | 600 | 430 |
| கரட் | 800 | 1200 | 1000 | 1400 | 900 |
| பூசணி | 140 | 140 | 140 | 200 | 120 |
| புடோல் | 300 | 250 | 250 | 300 | 250 |
| வாழைக்காய் | 220 | 300 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 400 | 450 | 350 |
| பெரிய வெங்காயம் | 380 | 380 | 400 | 450 | 370 |
| பாகற்காய் | 850 | 650 | 600 | 1200 | 800 |
| வெண்டக்காய் | 600 | 400 | 300 | 500 | 400 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 | 80 |
| பயற்றங்காய் | 800 | 800 | 800 | 800 | 1050 |
| லீக்ஸ் | 450 | 450 | 600. | 600 | 400 |
| பீற்றூட் | 800 | 600 | 800 | 800 | 600 |
| கறிமிளகாய் | 650 | 700 | 800 | 800 | 800 |
| முருங்கைக்காய் | — | — | 2500 | — | 2000 |
| போஞ்சி | 600 | 600 | 700 | 800 | 800 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | — | 500 | — |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 200 | 120 |
| தேசிக்காய் | 200 | 300 | 200 | 300 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 80 | 70-100 | 50-100 |
| இராசவள்ளி | 450 | 600 | 500 | 550 | — |
| வெங்காயப்பூ | 550 | 400 | 600 | 800 | 450 |
| முள்ளங்கி | 200 | 250 | 250 | 300 | 1200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | 60 | 120 |
| வல்லாரை | 80 | 250 | 50 | 80 | 120 |
| சாப்பலா | 100 | 100 | 100 | 150 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதி மீறல் கண்காணிக்க சி.சி.ரி.வி

(கொழும்பு)

கொழும்பில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களை கண்டறியும் நோக்கில் பொலிஸாரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு கமரா கட்டமைப்பு செயற்பாடுகள் நேற்றுடன் அமுலுக்கு வந்துள்ளது.

முக்கிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.ரி.வி கமராக்கள் மூலம் போக்குவரத்து விதிகளை மீறுபவர்கள் கண்டு பிடிக்கப்படவுள்ளனர். இதன்படி, குற்றவாளிகளாகக் கண்டறியப்படுபவர்கள் செலுத்த வேண்டிய அபராதப்பத்திரம் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களின் முகவரிக்கு அனுப்பப்படும்.

இதேவேளை, கொழும்பில் போக்குவரத்து விதிகளை மீறுபவர்களைக் கண்டறியும் பொலிஸாரின் சி.சி.ரி.வி திட்டத்துக்கு இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. (நி)

# விவசாயிகளுக்கு துப்பாக்கி வழங்க நடவடிக்கை

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

2 ஏக்கர் விவசாய காணி உள்ள விவசாயிகளுக்கு தங்களது பயிர்களை வன விலங்குகளிடம் இருந்து பாதுகாத்து கொள்ள துப்பாக்கிகள் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

பல்வேறு பிரதேசங்களில் உள்ள விவசாயப் பிரச்சினைகள் தொடர்பில் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சட்டரீதியாக 5 ஏக்கருக்கு மேலதிகமான விவசாய காணி உள்ள விவசாயிகளுக்கு மாத்திரமே துப்பாக்கிகள் வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் வன விலங்குகளால் பயிர்களில் ஏற்படும் சேதங்கள் அதிகரித்துள்ளதால் பயிர் செய்கைகளை கைவிடும் நிலையில் உள்ளதாக அமைச்சரிடம் தெரிவித்துள்ளனர். (நி)


# நல் வாழ்த்துக்கள்



கௌரவ சிவஞானம் சிறீதரன்

(தமிழரசுக் கட்சியின் தலைவர்)

பாராளுமன்றில் நீதிக்காக குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ சிவஞானம் சிறீதரன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர்களிற்கு எமது மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

Congratulations!

செ.செல்வகுமாரன்
37/2 செங்குந்தா வீதி
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

(C-18724)



# மணிவிழா வாழ்த்துக்கள்



செல்வி. மதிவதனி மகேந்திரன் (ஆசிரியை)

சேவை விபரம்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
01.09.1992–31.12.1995
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, போலவலான
1996/1997
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
01.01.1998–14.06.2010
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை
15.06.2010–31.05.2017
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
01.06.2017–22.01.2024

(18704)

பாடசாலைச் சமூகம்
யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.



கொலின்ஸ் விளையாட்டு கழக ஏற்பாட்டில்
CJ PROMTERS & ரேனுகா பந்தல் நடாத்தும்

# CARNIVAL



(சி-8188)

இடம்: மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம்.
காலம்: ஜனவரி 24 முதல் 28 வரை

கடைத்தொகுதிகளுக்கு, விளம்பரப்படுத்தல்களுக்கு, அனுசரணையாளர்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0772546511, 0775002840





# யாழ் மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)

Reg No: 9583 Tp No-021 221 4460
40, முனிஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

கடந்த 10.12.2023 இல் நடைபெற்ற எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2024 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள்ள இத்தால் அறியத்தருகின்றோம்.

| | |
|---|---|
| 1.திரு.அ.டெனிஸ் அவர்கள் | -தலைவர் |
| 2.திரு.சி.கனகராசா அவர்கள் | - உப தலைவர் |
| 3.திரு.ம.இளங்கோவன் அவர்கள் | -செயலாளர் |
| 4.திரு.பொ.செல்வநாயகம் அவர்கள் | -உப செயலாளர் |
| 5. திரு.சி.நாகேஸ்வரன் அவர்கள் | -பொருளாளர் |
| 6.திரு.ச.தியாகராசா அவர்கள் | -நிர்வாக உறுப்பினர் |
| 7.திரு.சி.அன்ரன் லோறன்ஸ் அவர்கள் | - நிர்வாக உறுப்பினர் |
| 8.திரு.ப.றொபின் றோய் அவர்கள் | - நிர்வாக உறுப்பினர் |
| 9.திரு.ஜெ.டிலக்ஷன் அவர்கள் | - நிர்வாக உறுப்பினர் |
| 10.திரு.ப.தியாகரன் அவர்கள் | - நிர்வாக உறுப்பினர் |
| 11.திருமதி.செ.கோமனேஸ்வரி அவர்கள் | - நிர்வாக உறுப்பினர் |
| 12.திரு.மு.தர்மகுலராசா அவர்கள் | -போசகர் |
| 13. திரு.மா.சிவசுப்பிரமணியம் அவர்கள் | -போசகர் |

குறிப்பு:- எமது சங்கப்பதிவில் உள்ள வாடகை ஓட்டோ சாரதிகள் ஓட்டோ சேவையின் போது பயணிகளை ஏற்றியவுடன் வாடகை கட்டண மீற்றரை இயங்கு நிலையில் வைப்பதோடு,அவர்களின் பயணத்தையும் பாதுகாத்து செயற்படுமாறும்,தங்களின் சேவை எவர்க்கும் இடையூறற்ற வகையில் அமையவேண்டும்.மேலும் ஒவ்வொருவரும் சங்கத்துடனான தொடர்பைப் பேணி அங்கத்துவ சந்தாப்பணத்தை செலுத்தி தங்கள் அங்கத்துவத்தை உறுதி செய்வதோடு தங்கள் ஓட்டோவை சங்கத்தில் பதிவு செய்த பின்பே தரிப்பிட சேவையை மேற்கொள்ள முடியும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

நன்றி.

(சி-8187)

நிர்வாகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# விழாக்கோலம் பூண்டது அயோத்தி



























அயோத்தி இராமர் கோவில் கும்பாபிஷேம் நேற்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது. 121 ஆச்சாரியர்கள் பூஜை மற்றும் யாகங்களை நடத்தினர். அயோத்தி நகர் பக்தர்களால் விழாக்கோலம் பூண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் பாரிய நிலச்சரிவு

# ஒரு கிராமமே அதில் சிக்கியது

- சுமார் 47 பேரை காணவில்லை
- 18 வீடுகள் மண்ணுக்குள்
- 500 பேர் வரை மீட்பு



(பீஜிங்)

**சீனாவில் யுன்னான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் ஒரு கிராமமே சிக்கியுள்ளது. சுமார் 500 பேர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 47 பேரின் கதி இதுவரை தெரியவில்லை.**

சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுன்னான் மாகாணத்தில் நேற்று காலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. ஜாவோடோங் நகரில் உள்ள லியாங்சுய் என்ற ஒரு கிராமம் இந்த நிலச்சரிவில் சிக்கியது.

நிலச்சரிவு குறித்து தகவல் அறிந்த மீட்புப்படையினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

பெரும்பாலான வீடுகள்மண்ணில் புதைந்தன. புதைந்த வீடுகளில் சிக்கியிருந்த 500 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர்.

18 குடும்பத்தைச் சேர்ந்த 47 இற்கும் மேற்பட்டோர் மண்ணில் புதைந்துள்ளனர். இவர்களை மீட்கும் பணியில் 200 மீட்புப்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் உயிரிழந்தோர் மற்றும் காயமடைந்தவர்கள் குறித்து தகவல் ஏதும் வெளியாகவில்லை. நிலச்சரிவுக்கான காரணமும் தெரிவிக்கப்படவில்லை. நிலச்சரிவு ஏற்பட்ட பகுதியில் கடும் குளிர் (மைனஸ் 3 டிகிரி வெப்பநிலை) நிலவி வருகிறது. (நி)

# அமெரிக்காவில் பனிப்புயல் 61 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வீசி வரும் பனிப்புயலில் இதுவரை 61 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்புப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அமெரிக்காவின் பல்வேறு மாகாணங்களில் கடும் பனிப்பொழிவுடன் பனிப்புயலும் வீசி வருகிறது.

பனிப்புயலால் பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டென்னிசி, ஒரிகன் ஆகிய மாகாணங்களில் பனிப்புயல் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# அயர்லாந்தில் 'இஷா' சூறாவளி விமானசேவைகள் ரத்து

(அயர்லாந்து)

இஷா சூறாவளியை அடுத்து அயர்லாந்தின் டப்ளின் விமான நிலையத்தின் 102 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறித்த சூறாவளி காரணமாக 27 விமானங்கள் ஏனைய விமான நிலையங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அயர்லாந்தின் பல பகுதிகளுக்கு அங்குள்ள வானிலை ஆராய்ச்சி மையம், செம் மஞ்சள் வானிலை எச்சரிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டொனெட்ஸ்க் நகரின் மீது உக்ரைன் எறிகணை தாக்குதல்

(கீங்)

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் நகரின் மீது உக்ரைன் நடத்திய எறிகணை தாக்குதலில் 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், காயமடைந்த 20 பேருக்கும் அதிகமானோர் வைத்தியசாலையில், சிகிச்சை பெற்று வருவதாக ரஷ்யாவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உக்ரைனிய இராணுவத்தினர் டொனெட்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள பரபரப்பான பகுதியில் இந்த எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எனினும், உக்ரைன் இந்த தாக்குதல் தொடர்பில், எந்தவிதமான உடனடிக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு கட்டுப்பாட்டுத் திட்டம்

# வருடம் முழுவதும் நடைமுறையில்

## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)

**யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை வருடம் முழுவதும் நடைமுறைப் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.**



யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளமையினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், தற்போது யாழ்ப்பாணத்தில் விசேட டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக இந்த ஆண்டில் இதுவரை 7 ஆயிரத்து 299 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# அரச கடன் பிரச்சினைகளுக்கு பொது வரைவு போதுமானதல்ல

## ஜி-77 மாநாட்டில் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

தென் துருவ நாடுகளின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதற்கு ஜி- 77 மற்றும் சீன குழுக்களுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உகண்டா - கம்பாலா நகரில் இன்று நடைபெறும் ஜி-77 மற்றும் சீனாவின் 3 ஆவது தென் துருவ மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதை வலியுறுத்தினார்.

மேலும் உரையாற்றிய அவர், இக்குழுவின் 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில், தென் துருவத்தின் சவால்களை எதிர்கொள்ள ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை அடிப்படை நியதிகளாக கொண்டு செயற்பட வேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

மேலும் கையிருப்பிலிருக்கும் நிதியை வேறு தேவைகளுக்காக பயன்படுத்துவது, மக்களுக்கு அவசியமான சேவைகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் தாக்கம் செலுத்துவதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு, அரச கடன் பிரச்சினைகளை நிவர்த்திப்பதற்காக தற்போதுள்ள பொது வரைவு போதுமானதல்ல என்றும் வலியுறுத்தினார். (நி)

# மலையகத்தில் தேசிய பொங்கல் விழா



(ஹற்றன்)

மலையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தேசிய பொங்கல் விழா இடம்பெற்றது.

அதன்படி நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்க[illegible] அபிவிருத்தி அமைச்[illegible] தொண்டமானின் ஏற்பாட்டில் ஹற்றன் - டன்பார்க் மைதானத்தில் குறித்த விழா நடைபெற்றது.

இதில் 1008 பொங்கல் பானை வைக்கப்பட்டு, தமிழர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களுடன் இந்தப் பொங்கல் விழா வெகு விமரிசையாகக் கொண்டப்பட்டிருந்தது.

அத்துடன் கோலப்போட்டி, தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான சிலம்பாட்டம் உள்ளிட்ட பல பாரம்பரிய போட்டிகளும் இடம்பெற்றன.

மேலும் இந்த தேசிய பொங்[illegible] பங்கேற்றிருந்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல் 14



தென்கச்சி கோசுவாமிநாதன்

## மூளை ஆராய்ச்சி

ஒருத்தர் ரொம்ப கவலைப்பட்டுக்கொண்டிருந்தார்! "ஏன் கவலைப்படுறீங்க" என்று இன்னொருத்தர் கேட்டார்.

"கடன் கொடுத்துவிட்டேன்!" அதனாலே கவலைப் படுகிறேன்" என்றார் அவர். ஆச்சரியமாக இருக்கே!" என்றார் இவர்.

"இதில் என்ன சேர் ஆச்சரியம்... இந்த காலத்திலே கடன் கொடுத்தவன்தான் கவலைப்படணும்.

வாங்கினவனா கவலைப்படுவான்?" என்றார் சர்வ சாதாரணமாக!

இந்த உலகத்திலே எதை வேணுமானாலும் கடன் கொடுக்கலாம். ஆனா ஒரு விஷயத்தை கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லுவாங்க... எதைத் தெரியுமா? புத்தியை!

ஆனா... விஞ்ஞானம் போற வேகத்தைப் பார்த்தால் இனிமேல் அதையும் கடன் கொடுக்கலாம் போல இருக்கு!

ஆமாம்! யாராவது எங்களிடம் வந்து சேர்! உங்க மூளையிலே கொஞ்சம் எடுக்கவா என்று கேட்டால்..."ஓ... எஸ் தாராளமா எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லி விடலாம் போலிருக்கு!

அப்படி யாரும் நம்மிடம் வந்து அவ்வளவு பிரியமா கேட்க மாட்டார்கள்! அது வேறே விஷயம்! நான் சொல்ல வந்தது என்ன என்றால் ரஷ்யாவிலே சில டாக்டர்கள் சேர்ந்து ஒரு ஆராய்ச்சி செய்தார்கள்!

மூளையைப் பற்றி ஒரு ஆராய்ச்சி! எப்படி செய்தார்கள் தெரியுமா? முதலிலே ஒரு முயல்குட்டியை பிடித்தார்கள்! அதுக்கு வயது என்ன தெரியுமா? 30 நாள்! மூளையில் cortex என்று ஒரு பகுதி இருக்கு! அதாவது மூளையோட வெளிப்பரப்பு அது! இந்த முயல்குட்டியின் தலையில் ஒரு ஆபரேஷன் நடந்தது! அதோட மூளையிலே இருக்கிற cortex பகுதியை ஆபரேஷன் பண்ணி தனியா எடுத்துவிட்டார்கள்.

அப்புறம் அந்த முயல் குட்டியை ஒரு வருஷத்துக்கு வழக்கம் போல எல்லாம் கொடுத்து வளர்த்தார்கள்! அந்த முயலும் எந்த பாதிப்பும் இல்லாமல் வளர்ந்துகொண்டு வந்தது!

ஒரு வருஷம் கழித்து மறுபடியும் ஒரு ஆபரேஷன்! மண்டை ஓட்டைத் திறந்து பாத்திருக்கிறார்கள்! பார்தால் ஒரே ஆச்சரியம்!

ஏற்கனவே அந்த cortex பகுதியை அதாவது மூளையோட வெளிப்பகுதியை எடுத்திருந்தார்கள் தானே அந்தப் பகுதி மறுபடியும் முன்னர் இருந்த மாதிரியே வளர்ந்து விட்டது தெரிந்தது.

இதிலிருந்து என்ன தெரிகிறது? மூளையிலே ஒரு பகுதியை எடுத்துவிட்டால் மறுபடியும் அது வளர்ந்து விடும் என்று தெரிகிறது.

இந்த ஆராய்ச்சி நமக்கு ரொம்பவும் உபயோகப்படும்!

சிலபேருக்கு கடுமையான தலைக்காயம் ஏற்படலாம். அந்த சமயத்திலே மூளையிலே பாதிப்பு ஏற்படும். அதுக்கு புதுமுறையிலே சிகிச்சைகள் கொடுப்பதற்கு இந்த ஆராய்ச்சி உபயோகமாக இருக்கும்.

மேடையிலே பேசிய ஒருத்தர் ஒரு கதையை சொன்னார்!

ஒரு இடத்திலே பல தேசத்து மனிதர்களுடைய மூளையெல்லாம் போத்தலில் வைத்து விற்றுக்கொண்டிருந்தார்களாம்! ஒருத்தர் அங்கே போய் விலை விசாரித்திருக்கிறார். அவர் நம் ஊர்காரர்!

இது இந்த தேசத்து மூளை... இதோட விலை 10 டொலர். இது இந்த நாட்டு மூளை... இதோட விலை 5 டொலர் இப்படி சொல்லிக்கொண்டே போனார்களாம்!

ஒரே ஒரு போத்தலிலே இருந்த மூளைக்கு மட்டும் விலை 1000 டொலர் என்று போட்டிருந்திருக்கு! இது எந்த ஊர் மூளை? என்று கேட்டார் நம் ஆள்!

"இது உங்க ஊர் மூளை தான்" என்று சொல்லியிருககிறார்.

நம் ஆளுக்கு ஒரே ஆச்சரியம்! "என்ன இது எங்க ஊர் மூளைக்கு மட்டும் ஏன் இவ்வளவு விலை?" என்று கேட்டார். அதுக்கு கடைக்காரர் சொன்னாராம்!" அதிகமா உபயோகப்படுத்தாத மூளை உங்க ஊர் மூளை! அதனாலே விலை ஜாஸ்தி!" என்றாராம். அதனாலே நம்ம மூளைக்கு எங்கே போனாலும் மதிப்பு.

பெருமைப்பட வேண்டிய விஷயம்! மூளையிலே கொஞ்சம் போனாகூட மறுபடியும் வளர்ந்து விடும் என்று வேற தெரிந்துகொண்டோம்! அப்புறம் என்ன?

வீட்டுலே கோபித்துக்கொண்டு "சுவரிலே போய் முட்டிக்கொள்கிறேன் என்று இதுவரைக்கும் சொல்லுவதோடு இருந்தோம்! இனிமேல் தைரியமாக போய் நிஜமாவே முட்டிக்கொள்ளலாம்.

# அழிவடைந்த வீடுகளை புனர்நிர்மாணம் செய்யுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவில் போரினாலும் ஆழிப் பேரலையினாலும் அழிவடைந்த வீடுகளை புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுவரை 100 இற்கு மேற்பட்ட வீடுகள் திருத்தம் செய்யப்படாமலே உள்ளன. அழிவடைந்த வீடுகளை சுற்றி பற்றைகள் வளர்ந்துள்ளன. இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் அழிவடைந்த சேதமடைந்த வீடுகளை புனரமைத்து தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

(நி-6-350)




# திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு, விநாயகபுரம் ஒட்டங்குள பாணலிங்கேஸ்வர அருள்மிகு நர்மதா நதீஸ்வரர் சிவன்கோயில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

அதனைமுன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 வரை எண்ணெய்க் காப்பு, பால்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளன.

நாளை புதன் கிழமை காலை 5 மணி தொடக்கம் 6.30 வரையுள்ள சுப வேளையில் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு நடைபெற்று அன்றைய தினம் நான்கு திக்கு இராஜ கோபுரங்களுக்கும் அடிக்கல் நாட்டுவிழா இடம் பெறவுள்ளது. (நி-5-6)

# துவிச்சக்கரவண்டி திருட்டில் ஈடுபட்டநபர் பொலிஸாரால் கைது

## 6 சைக்கிள்கள் மீட்பு



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டி திருட்டில் ஈடுபட்டவர் பொலிஸாரிடம் வசமாக சிக்கிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மைய பல நாட்களாக துவிச்சக்கரவண்டி திருடப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் தருமபுரம் பகுதியை சேர்ந்த 49 வயதுடைய நபர் இரகசிய கமராவின் உதவியுடன் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபரிடம் இருந்து 6 துவிச்சக்கர வண்டிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நபரை முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த இருப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (நி-6-299)



கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினால் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 11 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்-யதுபாஸ்கரன், தேவானந்தன்)

# நெற்பயிர்களை சேதமாக்கும் யானைகள்

## விவசாயிகள் கவலை

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தின் நெல்வயல்களை யானைகள் அழித்து வருவதன் காரணமாக இரவில் விவசாயிகள் காவலில் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்கந்தபுரம் 3 ஆம், 4 ஆம் வாய்க்கால்களின் வயல் நிலங்களில் இரவு வேளைகளில் யானைகள் நுழைந்து பயிர் அழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன.

பெருமளவு பணம் செலவழித்து பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற போது யானைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு உரிய அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர். (நி-6-350)

## இழப்பீடு வழங்ககோரி

# இரணைமடு கமக்கார அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு



(முறிகண்டி)

இரணை மடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் தமக்கு ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு இழப்பீடு வழங்கக்கோரி நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்துக்கு சென்ற விவசாயிகள் ஜனாதிபதிக்கான மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர்.

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் 72 ஆயிரம் ஏக்கர் காலபோக செய்கை மேற்கொள்ளப்பட்டது. இந் நிலையில் அதிக மழை மற்றும் நோய் தாக்கம் காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 1.5 மெற்றிக் தொண் அறுவடை செய்திருந்தோம். ஆனால் இம்முறை 0.5 மெற்றிக் தொண் மாத்திரமே அறுவடை செய்ய முடிந்துள்ளது.

எமது நிலையை கருத்தில் கொண்டு அடுத்த ஆண்டில் செய்கை மேற்கொள்ளும் வகையில் நட்ட ஈட்டினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து உதவுமாறு குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.மகஜர் கையளிக்கப்பட்ட பின்னர், நெல்லுக்கான நிர்ணய விலை இல்லாமையால் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் அதிபரிடம் தெரிவித்தனர்.

மேலும் குறித்த மகஜரின் பிரதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் கிடைக்கும் வகையில் அவரது இணைப்பாளரிடமும் கையளிக்கப்பட்டது. குறித்த மகஜர் ஜனாதிபதிக்கு உடன் அனுப்பிவைக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.(நி-6-100-350)

# சேதமடைந்துள்ள வீதிகளை புனரமைத்து தாருங்கள்

## துணுக்காய் மக்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் புனரமைக்கப்பட்ட பல வீதிகள் தற்போது சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

துணுக்காயில் இருந்து ஆலங்குளம், உயிலங்குளம் வரையான வீதி மற்றும் கொக்காவிலில் இருந்து புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் வரையான வீதி சேதமடைந்துள்ளது.

மேலும் மணல் டிப்பர்கள் தொடர்ச்சியாக வீதிகளில் பயணிப்பதன் காரணமாக வீதிகள் சேதமடைந்து வருவதாக மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் உயிலங்குளத்தில் இருந்து தென்னியங்குளம், கோட்டைகட்டியகுளம், அம்பலப்பெருமாள்குளம், அக்கராயன் வரையான வீதி புனரமைக்கப்படாமலே காணப்படுகின்றது. இவ்வீதி புனரமைப்பிற்காக குவிக்கப்பட்ட கிரவல்கள் பல இடங்களில் காணப்படுகின்ற போதிலும் புனரமைப்பு பணிகள் இடம்பெறவில்லை என மக்கள் தெரிவித்தனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 385





பற்பல அபாயங்களிலிருந்து தப்புவதற்குத்தான் புரிந்த சாகசச் செயல்களைக் குறித்து அதிகமாக விஸ்தரிக்க விரும்பாதவன்போல் காட்டிக் கொண்டு, அதே சமயத்தில் தன் பிரதாபங்களை வெளியிட்டான். கடைசியில், "ஐயா! தங்கள் அருமைத் தந்தையாரைச் சிறையில் வைத்திருப்பதுபோல் வைத்திருக்கிறார்கள்.

நெருங்கிய பந்துக்களும் பெருந்தர அதிகாரிகளும் சிற்றரசர்களும் சேர்ந்து பயங்கரமான சதி செய்கிறார்கள். இதனாலெல்லாம் தங்கள் சகோதரி இளைய பிராட்டி பெருங்கவலையில் ஆழ்ந்திருக்கிறார். ஆகையால் தாங்கள் உடனே புறப்பட்டு, என்னுடன் பழையாறைக்கு வரவேண்டும். ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது!" என்று முடித்தான்.

பிறகு ஆழ்வார்க்கடியான் தனது வரலாற்றைக் கூறினான். வந்தியத்தேவன் கூறியவற்றையெல்லாம் அவனும் ஆமோதித்தான். அத்துடன் திருப்புறம்பியம் பள்ளிப்படையருகில், நள்ளிரவில் நடந்த கொலைகாரர்களின் சதியைப் பற்றியும் கூறினான். சோழநாட்டு நிலைமை இவ்வளவு அபாயகரமாயிருப்பதால் தற்சமயம் இளவரசர் அங்கு வராமலிருப்பதே நல்லது என்று முதன் மந்திரி சொல்லி அனுப்பிய செய்தியை மறுபடியும் வற்புறுத்திக் கூறினான்.

"தாங்கள் சோழ நாட்டுக்குத் தற்சமயம் வராமலிருப்பது மட்டுமல்ல இங்கேயும் படையெடுப்பை மேலும் விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டாம் என்று முதன் மந்திரி கேட்டுக் கொள்கிறார். படைகளையெல்லாம் திரட்டி வட இலங்கையில் சேர்த்து வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறார். சதிகாரர்கள் சீக்கிரத்தில் வெளிப்பட்டு வந்து தங்கள் உண்மைச் சொரூபத்தைக் காட்டுவார்கள். அச்சமயம் இப்போது இலங்கையிலுள்ள படைமிக்க உபயோகமாயிருக்கும் என்று முதன் மந்திரி அபிப்பிராயப்படுகிறார். பாண்டிய நாட்டில் தற்சமயம் உள்ள கைக்கோளர் படை, வன்னியர் படை, வேளாளர் படை மூன்றும் இளவரசருக்காக உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்யக் காத்திருக்கின்றன. இதையும் தங்களுக்குத் தெரிவிக்கும்படி முதன் மந்திரி எனக்குக் கட்டளையிட்டார்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"திருமலை! உன் குருநாதர் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்? பாடலிபுரத்துச் சாணக்கியரைப் போல் இவர் அன்பில் சாணக்கியர் என்று தன்னை எண்ணிக் கொண்டிருக்கிறாரா? என் உற்றார் உறவினரோடு நான் சண்டை போடவேண்டும் என்கிறாரா?" என்று இளவரசர் ஆத்திரமாய்க் கேட்டார்.

"இல்லை! ஐயா! அநிருத்தர் அவ்விதம் சொல்லவில்லை. ஆனால் சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்கிறவர்களை, சாம்ராஜ்யத்துக்குத் துரோகம் செய்ய முயற்சி தொடங்கியிருப்பவர்களை சமயம் பார்த்துத் தண்டிக்க வேண்டும் என்கிறார். அதற்கு உதவி புரிவது தங்கள் கடமையல்லவா?" என்றான் திருமலை.

"அதற்கு நான் எப்படி அதிகாரியாவேன்? சதி நடப்பது உண்மையானால், அதற்குத்தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது சக்கரவர்த்தியல்லவா? என் தந்தையின் கட்டளையின்றி நான் எப்படி இந்தக் காரியத்தில் பிரவேசிக்க முடியும்!" என்றார் இளவரசர்.

வந்தியத்தேவன் இப்போது குறுக்கிட்டு "இளவரசே! தங்கள் தந்தை இப்போது சுவாதீனமாயில்லை! பழுவேட்டரையர்கள் அவரைச் சிறை வைத்திருப்பதுபோல் வைத்திருக்கிறார்கள். யாரும் நெருங்க முடியாதபடி அரண்மனைக்குள்ளே வைத்திருக்கிறார்கள். தங்கள் தமையனாரோ தஞ்சைக்கு வருவதில்லையென்று விரதம் வைத்துக்கொண்டிருக்கிறார். இந்த நிலைமையில் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பது தங்கள் பொறுப்பல்லவா? உடனே பழையாறைக்கு வர வேண்டியது தங்கள் கடமை அல்லவா?" என்றான்.

"இளவரசர் பழையாறைக்கு வரவேண்டிய அவசியம் என்ன? அதுதான் எனக்குத் தெரியவில்லை!' என்றான் ஆழ்வார்க்கடியான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## உலகத்தில் சிறந்தது

முல்லா மன்னரிடம் சில காலம் அமைச்சராக இருந்தார். முல்லாவின் மீது மன்னருக்கு அதிக அபிமானம் இருந்தது. அதனால் அவரை எப்போதுமே தன்னுடன் வைத்துக் கொண்டு அவருடன் உரையாடி மகிழ்ந்தார்.

மன்னர் உணவருந்தும் சமயத்திலெல்லாம் முல்லாவையும் தம்முடன் அமர்ந்து உணவருந்தச் சொல்வார்.

ஒருநாள் மன்னரும் முல்லாவும் வழக்கம் போல அருகருகே அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தனர்.



அன்று பீன்ஸ் கறி சமைக்கப்பட்டிருந்தது.

மன்னருக்கு அன்று அதிகமான பசியாக இருந்ததால் பீன்ஸ் கறியை மிகவும் விரும்பிச் சாப்பிட்டார்.

சாப்பாட்டின்இடையே மன்னர் முல்லாவை நோக்கி," முல்லா உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது நீர் என்ன நினைக்கிறீர்?" என்று கேட்டார்.

"சந்தேகமே வேண்டாம். பீன்ஸ் காய்க்கு நிகராக வேறு காயைச் சொல்லவே முடியாது" என்று முல்லா [illegible] போட்டார்.

மன்னர் உடனே சமையற்காரனை அழைத்து "இனி சமையலில் பீன்ஸ் கறிக்குத் தான் முதலிடம் தர வேண்டும். அன்றாடம் ஏதாவது ஒரு உருவத்தில் பீன்ஸை உணவுடன் சேர்ந்து விடு" என்று உத்தரவிட்டார்.

நாள் தவறாமல் உணவில் பீன்ஸை சேர்த்துக் கொண்டதால் மன்னருக்கு அந்த காயின் மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டது.

அன்று சாப்பாட்டின் போது பீன்ஸ் பரிமாறப்பட்டபோது மன்னர் முல்லாவை நோக்கி "உலகத்திலேயே மிகவும் மோசமான காய் பீன்ஸ் என்றுதான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்?" என்று கேட்டார்..

"ஆமாம் மன்னர் அவர்களே, எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நான் அறிந்த மட்டில் இவ்வளவு மோசமான சுவையே இல்லாத பீன்ஸைப் போன்ற காயைக் கண்டதே இல்லை" என்றார் முல்லா

"என்ன முல்லா! பத்து நாட்களுக்கு முன்னால் நான் கேட்டபோது உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்று சொன்னீர். இப்பொழுது தலை கீழாக மாற்றிப் பேசுகிறீரே" என்று மன்னர் கேட்டார்.

முல்லா சிரித்துக் கொண்டே "மன்னர் அவர்களே! என்ன செய்வது? நான் தங்களிடம் அல்லவா வேலை பார்க்கிறேன். பீன்ஸிடமல்லவே" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
- காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழரசுக் கட்சியின் தலைவர் புது வியூகம் அமைக்க வேண்டும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒரு கட்சியின் தலைவர் என்பதற்கு அப்பால், தமிழரசுக் கட்சி என்பது தமிழர்களின் கட்சியாகக் கருதப்பட்டதென்ற அடிப்படையில் தமிழ் மக்களின் அரசியல் தலைமையைப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பொறுப்பேற்றுள்ளார் எனலாம்.

ஆம், கடந்த காலங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை தனிமனிதத் தீர்மானத்தை அமுல்படுத்துவதிலேயே தீவிரமாக இருந்தது.

அதாவது தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் என்ற அடிப்படையில், இரா.சம்பந்தர் அவர்கள் தனித்துச் செயற்படுவதையே விரும்பியிருந்தார். இதனால் தமிழரசுக் கட்சி விமர்சனத்துக் குரியதாயிற்று.

உண்மையில் தமிழ் மக்கள் மிகவும் மதிப்போடும் கௌரவத்தோடும் பாதுகாத்த தமிழரசுக் கட்சியைப் பலயீனப்படுத்தியதிலும் அதன்மீது தமிழ் மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்தியதிலும் இரா.சம்பந்தர் அவர்களுக்குக் கணிசமான பங்கு உண்டு.

தவிர, இரா.சம்பந்தர் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்புக்களைத் தானே கையாண்டார்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடையலாயிற்று.

உண்மையில் தமிழ்த் தேசியத்துடன் இணக்கப்பாட்டைக் கொண்டுள்ள தமிழ் அரசியல் கட்சிகளை உள்ளடக்கியதான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் ஒற்றுமையாகவும் பலமாகவும் இருந்தது.

இருந்தும் தனது தலைமையை தனித்துவப்படுத்தும் நோக்கிலும் தமிழ் மக்களின் உரிமைசார் விடயத்தில் தானே முடிவுகளை எடுப்பதற்காகவும் இரா.சம்பந்தர் கூட்டமைப்பை விரும்பவில்லை.

இதன் காரணமாக தமிழ்க் கட்சிகள் கன்னை பிரிந்ததோடு தமிழ் அரசியல் தரப்புகளிடம் ஒற்றுமையில்லை என்ற விடயம் உலகம் முழுவதும் அறியும் அளவுக்கு நிலைமை வந்தாயிற்று.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் எடுத்துள்ளார்.

எனவே அவரின் முன்னால் பாரிய பொறுப்புக்களும் கடமைகளும் பொறுப்புக்கூறல்களும் உண்டு.

அதாவது இலங்கைத் தமிழரசுக் கட்சியை தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைமையாக நீண்ட நெடுங்காலம் நிலைப்படுத்தி வருகின்றனர் என்ற அடிப்படையில், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற எல்லைகளுக்கு அப்பால் தமிழ் அரசியலின் தலைவர் என்ற பொறுப்பையும் எடுத்துள்ளார்.

எனவே தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி, அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான திட்டமிடல்களை அவர் செய்தாக வேண்டும்.

அதேநேரம் எங்களின் உரிமையை வென்றெடுப்பதற்கான வியூகத்தை தமிழ்ப் புத்திஜீவிகளின் ஆலோசனையின் பிரகாரம் அமைப்பதும் உடனடித் தேவையாகும்.

இதை அவர் வெற்றிகரமாகச் செய்யும் போதுதான் தமிழ் மக்களின் அபிலாசைகள் அடையப்படும்.

# இலங்கை யுக்திய நடவடிக்கையை உடனடியாக இடைநிறுத்த வேண்டும்

## ஐ.நா நிபுணர்கள் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் யுக்திய நடவடிக்கையை உடனடியாக நிறுத்தவேண்டும் அது குறித்து மீளாய்வு செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

போதைப்பொருளிற்கு எதிரான கடுமையான பாதுகாப்பை நடவடிக்கைகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை குறித்து ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அதிகாரிகள் உடனடியாக இந்த நடவடிக்கையை இடைநிறுத்த வேண்டும் மீளாய்வு செய்ய வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சுகாதாரம் மற்றும் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் ஐ.நா நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுக்திய எனப்படும் நடவடிக்கையின் போது சித்திரவதை மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புறக்கணிக்கப்பட்ட சமூக பொருளாதார குழுக்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான போதைப்பொருள் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டதை கடுமையாக கண்டித்துள்ள ஐ.நாவின் மனித உரிமை நிபுணர்கள் கட்டாய இராணுவ புனர்வாழ்வு முகாம்களில் நூற்றுக்கணக்கானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதையும் கண்டித்துள்ளனர்.

போதைப்பொருள் பாவனையாளர்களிற்கு எதிரான கடும் ஒடுக்கு முறை காணப்படும் சூழமைவில் இது கவலையளிக்கின்றது என ஐக்கிய நாடுகள் நிபுணர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(ம-7)

## 24 மணிநேரத்தில் 910 பேர் கைது

(கொழும்பு)

கடந்த 24 மணிநேரத்தில் நாட்டில் 910 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்பு விசேட நடவடிக்கையான "யுக்திய மெஹெயும" நடவடிக்கை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நள்ளிரவு 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 910 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் தகவலின்படி, 65 கிலோ கிராம் ஹெரோயின், 136 கிராம் ஐஸ் மற்றும் 254 போதை மாத்திரைகள் கடந்த 24 மணி நேரத்தில் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ம-7)

## சங்கடஹர சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் 29.1.2024 திங்கட்கிழமை மாலை 3.15 மணிக்கு மூலமூர்த்திபூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக்குருக்கள் அறிவித்துள்ளார்.

(ம-7)

### சுதுமலையில் டெங்கு அதிகரிப்பு

## 21 டெங்கு நோயாளர்கள் கடந்த வாரம் அடையாளம்

(சுதுமலை)

யாழ்ப்பாணம் சுதுமலைப் பகுதியில் கடந்த வாரம் 21 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ள நிலையில், அவர்களில் 13 பேர் 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் ஆவார்கள்.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர் ம.ஜெயபிரதீப் தலைமையில் அப்பகுதி கிராம சேவையாளர், டெங்கு தடுப்பு உத்தியோகஸ்தர்கள் இணைந்து வீட்டு தரிசிப்பில் ஈடுபட்டனர்.

அதன் போது டெங்கு நுளம்பு பரவுவதற்கு ஏதுவான சூழலை வைத்திருந்த 23 குடியிருப்பாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை துண்டு வழங்கப்பட்டதுடன், நுளம்பு குடம்பிகள் காணப்பட்டவளாக குடியிருப்பாளர்கள் நால்வருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மன்றில் முன்னிலையான மூவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து.

அவர்களுக்கு தலா 4 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டது. மன்றில் முன்னிலையாகாத குடியிருப்பாளருக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை நுளம்பு பரவக்கூடிய சூழல் காணப்பட்ட வெற்று காணி உரிமையாளர்களுக்கு, அக்காணிகளை துப்பரவு செய்வதற்கு 7 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

(ம-7,33)

## பணவீக்கம் அதிகரிப்பு

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின்படி, நாட்டில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த விலைச் சுட்டெண்படி, 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணவீக்கம் 4.2 சதவீதமாக பதிவாகியுள்ளது.

இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பணவீக்கம் 2.8 சதவீதமாக பதிவாகியிருந்தது.

அதேவேளை, 2023 நவம்பரில் -2.2 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் டிசம்பரில் 1.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தற்போது வற்வரி அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

இதற்கமைய இந்த மாதத்திற்கான பணவீக்கம் மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாளாந்தம் உணவு மற்றும் உணவல்லா பொருட்களின் விலைகள் அதிகரித்து வரும் நிலையில் பொது மக்கள் பெரும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த விலை அதிகரிப்பு தொடர்பில் பொது மக்கள் தமது அதிருப்தியையும் வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)

## நீர்வேலியில் விபத்து இளைஞன் படுகாயம்

யாழ் நீர்வேலி மாசி வன்சந்தியில்நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாசிவன் சந்தியால் மோட்டார் சைக்கிளில் இளைஞர் செல்லும் போது குறுக்கே வந்த ஹயஸ்ரக வான் மோதியதில் விபத்து நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## முதலிரு மேற்கத்தய ஆட்சியாளர் காலகட்டம் - பகுதி-III

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

06

அதற்குப்பல காரணங்கள் இருந்தன. முதலாவது, "கண்டியின் மதத்துரோகி" என்று போர்த்துக்கேயரால் தூற்றப்பட்ட விமலதர்மன் அவ்விராச்சியத்தைப் பரிபாலித்தான். அவனைத் தக்கவாறு தண்டித்து அரச பீடத்திலிருந்தும் அவனை நீக்கிவிடவேண்டும் என்று போர்த்துக்கேயர் துடித்தனர். இரண்டாவது, தர்மபாலன் எழுதிவைத்த சாசனத்தின்படி கண்டி இராச்சியம் உட்பட இலங்கை முழுவதும் தமக்கே உரியதென்றும் விமலதர்ம சூரியன் அவ்விராச்சியத்தை முறை தவறி அபகரித்தபடியினால் அவனை விரட்டித் துரத்த வேண்டுமென்றும் கருதினர்.

இதே நேரத்தில் புவனேகபாகுவின் மகளான சமுத்ராதேவியைத் திருமணம் செய்திருந்த விதியபண்டாரன் சிறந்த போர் வீரனாவான். தனது மகன் தர்மபாலனின் ஆட்சியின் ஆரம்பத்திலேயே போர்த்துக்கேயர், கோட்டையின் அரசமாளிகையைச் சூறையாடியமை, பொதுமக்களுக்குப் பல்வேறு இன்னல்கள் விளைவித்தமை போன்ற காரணங்களால் விதியபண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தான். இதனால் போர்த்துக்கேயர் அவனைக் கைது செய்து கொழும்புக் கோட்டையினுள் சிறை வைத்தனர். எனினும் விதிய பண்டாரனின் மனைவி அவன் சிறை வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு இரகசியமாக சுரங்கப்பாதை அமைத்து அவனை விடுவித்தான்.

பஸ்துன் கோறளையில் பெலந்த பிரதேசத்திற்குத் தப்பியோடிய விதியபண்டாரன். அங்கு கோட்டையொன்றை அமைத்துப் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போர் தொடுத்தான். போர்த்துக்கேயர் மீது வெறுப்புக் கொண்டிருந்த கோட்டை மக்களின் உதவியும் விதிய பண்டாரனுக்குக் கிடைத்தது. விதியபண்டாரனின் செயலால் போர்த்துக்கேயருக்குப் பலவித தட்டங்கள் ஏற்பட்டன.

அவ்வாறே விதியபண்டாரனின் செயல் சீதாவாக்கை மன்னனுக்கும் பெரும் சிக்கலாக அமைந்தது. இதனால் மாயாதுன்னையும் போர்த்துக்கேயரும் இணைந்து பெலந்த கோட்டையை ஆக்கிர மித்து விதிய பண்டாரனைத் தோற்கடித்தனர். கண்டி இராச்சியத்திற்குத் தப்பிச் சென்ற விதியபண்டாரன் பின்னர் யாழ்ப்பாணத்தில் இருக்கும்போது ஏற்பட்ட மோதலொன்றில் உயிரிழந்தான்.

### சீதாவாக்கை இராசதானியில் போர்த்துக்கேயர்

சீதாவாக்கை மன்னனான மாயாதுன்னை, அந்த இராச்சியம் ஆரம்பமான காலந்தொடங்கி போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கையையே பின்பற்றினான். கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேயரின் ஆதிக்கம் வலுவடைந்து வரும் போதே மாயாதுன்னை கோட்டை இராச்சிய மன்னர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் எதிராகப் போரிடத் தொடங்கினான். தர்மபாலன் கோட்டையின் அரசனானதும் மாயாதுன்னையின் தாக்குதல் அதிகமானது.

1555 ஆம் ஆண்டளவில் மாயாதுன்னையின் மகனும் சிறந்த வீரனுமான டிகிரி பண்டார சீதாவாக்கைப் படையின் தலைமைத்துவப் பதவியை வகித்ததால் அப்படை மேலும் வலிமை பெற்றது. 1557 ஆம் ஆண்டு மாயாதுன்னை தனது பலத்தைப் பயன்படுத்திக் கோட்டை நகரைத் தாக்கினான்.

எனினும் போர்த்துக்கேயரின் பீரங்கித் தாக்குதலால் சீதாவாக்கைப் படையினரால் நகரின் உள்ளே செல்ல முடியவில்லை. எனினும் மாயாதுன்னை கோட்டை நகருக்கு வெளியேயுள்ள பிரதேசங்களை இடையிடையே தாக்கும் நடவடிக்கையை மேற்கொண்டான்.

கோட்டை நகரைத் தாக்கும் முயற்சி தோல்வியடைந்த பின்னர் சிறிதுகாலம் பாரிய தாக்குதல்களை மேற்கொள்வதைத் தவிர்த்துக் கொண்ட சீதாவாக்கை ஆட்சியாளர்கள், கோட்டையையும் கொழும்பையும் ஒரே வேளையில் தாக்க முயன்றனர். இதில் சீதாவக்கை இராஜசிங்கனால் (டிகிரிபண்டாரகுமாரன்) முன்னெடுத்துச் செல்லப்பட்ட சீதாவாக்கைப் படைக்கும் போர்த்துக்கேயப் படைக்கும் இடையே முல்லேரியா என்ற இடத்தில் கடுஞ்சமர் நடைபெற்றது. ஒரு நாள் முழுவதும் நடைபெற்ற இப்போரில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடைந்தனர். இதில் இறந்த போர்த்துக்கேயரது எண்ணிக்கை 1600 எனக் கூறப்படுகிறது. இது ஆசிய நாடொன்றில் போர்த்துக்கேயர் அடைந்த மிக மோசமான தோல்வியாகும்.

கோட்டை நகர் இடையிடையே சீதாவாக்கையின் தாக்குதலுக்கு உள்ளானதால் 1565ஆம் ஆண்டு தர்மபாலன் கோட்டை நகரை விட்டுக் கொழும்புக் கோட்டையில் குடியேறினான். மாயாதுன்னை 1581 ஆம் ஆண்டு இறந்ததும், டிகிரி பண்டார இராஜசிங்கன் என்ற பெயரில் சீதாவாக்கையின் அரசனானான். அரசனாகி சிறிது காலத்தில் அவன், அக்காலத்தில் கண்டி இராச்சிய அரசனாக இருந்த கரலியத்த பண்டாரவைத் துரத்திவிட்டு அந்த இராச்சியத்தையும் சீதாவாக்கையுடன் இணைத்துக் கொண்டான்.

இதன்படி 1582 ஆம் ஆண்டாகும்போது இந்நாட்டில் போர்த்துக்கேயரின் அதிகாரத்தைக் கொழும்பு கோட்டையைச் சுற்றியுள்ள பிரதேசங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்த சீதாவாக்கை மன்னன் இராஜசிங்கனால் முடியுமாக இருந்தது. இதனால் கோட்டை இராச்சியத்தின் பெரும்பகுதியும் றைகமையும் கண்டி இராச்சியமும் சீதாவாக்கையின் கீழ் வந்தன.

இராஜசிங்கன் இரண்டு சந்தர்ப்பங்களில் கொழும்புக் கோட்டையைத் தாக்கிப் போர்த்துகேயரை இந்நாட்டிலிருந்து துரத்த முயன்றான். எனினும் போர்த்துக்கேயரின் ஆயுத பலமும் போர்த்துகேயரின் கீழைத்தேய தலைமை நிலையமாக விளங்கிய கோவாவிலிருந்து அவர்களுக்குக் கிடைத்த உதவியும் இரண்டு சந்தர்ப்பங்களிலும் இராஜசிங்கனின் முயற்சி வெற்றியளிக்காமைக்கான காரணங்களாயின.

இராஜசிங்கன் 1587 ஆம் ஆண்டு இரண்டாம் முறையாகக் கோட்டையைத் தாக்கும்போது வாவியின் நீரை வாய்க்கால் மூலம் கடலுக்கு அனுப்பி, கோட்டையுள் நுழைய முயன்ற போதிலும் அந்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்தது. சீதாவாக்கை இராசதானியிடம் தேவையான கடற்படை வலிமை இன்மை இந்தத் தோல்விக்கு மற்றுமொரு காரணமாகும்.

போர்த்துக்கேயருக்கு எதிராக அடிக்கடி போரில் ஈடுப்பட்ட இராஜசிங்கன் கண்டி இராசதானியின் மன்னனான விமலதர்மசூரியனுடன் செய்த போரில் தோல்வியுற்றுத் திரும்புகையில் பெத்தங்கொடயில் மூங்கில் சிராய் குற்றியதால் ஏற்பட்ட காயம் காரணமாக மரணமானான். அத்துடன் சீதாவாக்கை இராசதானி வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராக அடிக்கடி போரில் ஈடுபட்டமை, இராஜசிங்க மன்னன் தனது இறுதிக்காலத்தில் மேற்கொண்ட பௌத்த எதிர்ப்புக் கொள்கை, கண்டி இராச்சியத்தை கைப்பற்ற இராஜசிங்கனுக்கு உதவிய வீர சுந்தர பண்டாரவைக் கொன்றமையால் கண்டி இராச்சிய மக்களின் ஆதரவு குறைந்தமை, வீர சுந்தர பண்டாரவின் மகன் கோணப்பு பண்டாரன் கண்டி இராச்சியத்தின் அரசனாதல், இராஜசிங்கனுக்குப் பின்னர் ஆட்சிக்கு உரிமை கோர சரியான உரிமையாளன் இன்மை என்பன சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

சீதாவாக்கை மன்னர்கள் முன்னெடுத்துச் சென்ற போர்த்துக்கேயருக்கு எதி ரான நாட்டுப்பற்றான போர்களினால் இந்நாட்டில் போர்த் துக்கேயரின் ஆட்சி பரவுதல் பெரும் பாலும் மட்டுப்படுத்தப்பட்டது.

சீதாவாக்கையின் வீழ்ச்சிக் காலத்தில் பலம் பெற்ற போர்த்துக்கேயர், அந்த இராச்சியம் வீழ்ச்சியுற்றதும் கோட்டை, றைகம ஆகிய பிரதேசங்களுக்குச் சொந்தமான பிரதேசங்களையும் சீதாவாக்கையின் கீழிருந்த பிரதேசங்களில் சிலவற்றையும் தமது ஆட்சிக்கு உட்படுத்திக் கரையோரப் பிரதேசத்தின் பெரும் பகுதியில் தமது ஆட்சியை நிலைநாட்டினர்.

### யாழ்ப்பாண இராச்சியத்தில் போர்த்துக்கேயர்

இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியின் பின்னர் தோற்றம் பெற்ற யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்தோர் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆவர். போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது அப் பரம்பரையைச் சேர்ந்த பரராசசேகரம் யாழ்ப்பாண அரசனாக இருந்தான்.. கறுவா, மிளகு போன்ற வர்த்தகப் பயிர்கள் யாழ்ப்பாணப் பகுதியில் கிடைக்காததால் இலங்கைக்கு வந்த ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின்மீது அதிக கவனம் செலுத்தவில்லை.

யாழ்ப்பாண இராச்சியத்தில் சங்கிலி மன்னன் ஆட்சிபுரிந்து வந்த காலத்திலேயே போர்த்துக்கேயரது முதற்தொடர்பு ஏற்பட்டிருந்தது. இவன் அந்நியரான போர்த்துக்கேயர யாழ்ப்பாண அரசில் கால்பதிப்பதை ஆரம்பம் முதலே விரும்பாதவனாகவும் அவர்களுக்கு எதிராகச் செயற்படுபவனாகவும் காணப்பட்டான். இதனால் இவனை போர்த்துக்கேய ஆவணங்கள் இகழ்ந்தே குறிப்பிடுகின்றன. இது அவனது மொழி, சமய மற்றும் நாட்டுப்பற்றையே பிரதிபலிப்பதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவனது ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயரது வர்த்தகக் கப்பல்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் கரையொதுங்கியிருந்த போது சங்கிலி மன்னன் தனது படையை அனுப்பி அப்பொருட்களை பறிமுதல் செய்ததுடன் கப்பல்களையும் அழித்தொழித்து அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தான். ஆனால் அச்சம்பவம் போர்த்துக்கேயரை ஆத்திரமூட்டுவதாகவே அமைந்திருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன்...

டார்.

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் படையில் நீண்ட காலமாக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தி மேலதிக விசாரணை களை கோப்பாய் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## பெண்ணின்...

இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருமணமாகாத 44 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் ணுடைய சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## தமிழ்...

சந்தித்து ஆசி பெற்றார்.

கொழும்பில் உள்ள சம்பந்தனின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடை பெற்றது. இதன்போது சிறீதரனுக்குத் தனது வாழ்த்துக்களையும் சம்பந்தன் தெரிவித்தார்.

"இது மக்கள் பிரதிநிதிகளின் - கட்சித் தொண்டர்களின் தெரிவு. புதிய தலைவரான உங்களுக்கு எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களும் நல் லாசிகளும் எப்போதும் இருக்கும். எங் களுடைய மக்களுக்காக உங்களை முழுமையாக அர்ப்பணித்துச் செயற் படுவீர்கள் என்று நம்புகின்றேன்" என்று சம்பந்தன் கூறினார்.

கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப் பட்டது. அத்துடன், கட்சிக்குள் ஐக்கி யம் அவசியம் என்பதையும் சம்பந்தன், புதிய தலைவரிடம் எடுத்துரைத்தார்.

திருகோணமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினரான இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலை மைப் பதவியில் பல வருடங்கள் இருந் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## நயினை...

பெறவுள்ளது.

பக்தர்களின் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும் நிலை யில் நாளை புதன்கிழமை காலை 9.38 மணி முதல் முற்பகல் 11.20 மணிவரை யிலான சுபநேரத்தில் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனுக்கு புனராவர்த் தன அஷ்டபந்தன ஸ்வர்ணபந்தன சமர்ப்பண உத்தமோத்தம த்ரயத் திரும்சத் (33) குண்டபக்ஷ மஹாயாக பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது. (ம-7)

## உரிய காலத்தில்...

நீதி, சிறைச்சாலை நடவடிக்கை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மற் றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் கலாநிதி பீலிக்ஸ் நியூமன் ஆகி யோருக்கிடையில் நேற்று திங்கட் கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவித்ததாக நீதி அமைச்சு அறிவித் துள்ளது.

அத்துடன் இந்த நாட்டில் இனங் களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக தேசிய ஐக்கி யம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், காணாமல்போனவர்கள் தொடர்பில் ஆராயும் அலுவலகம் மற்றும் இழப்பீட்டு காரியாலயம் அமைக் கப்பட்டுள்ளதாகவும் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை விரை வாக அமைப்பதற்கு இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த நாட்டில் இலஞ் சம் மற்றும் ஊழல் தொடர்பில் அரசி யல்வாதிகள் மீது விரல் நீட்டப்படுகிறது. அரசியல்வாதிகளை நாட்டு மக்கள் நிராகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கு தேவையான அரசியலமைப்பு திருத் தம், தேர்தல் செலவு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்பு சட்டம் போன்ற சட்ட திட்டங்கள் தற்போது அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

இதன் ஊடாக ஊழல் மற்றும் சீர் கேடுகளற்ற இலங்கையை உருவாக் கும் அடிப்படை அடித்தளத்தை அமைத்திருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும் நீதிமன்ற நடவடிக்கையை மிகவும் பலமிக்கதாகவும் விரைவாக செயற்படுத்துவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய தேவையான நடவடிக்கைகள் ஏற் கெனவே மேற்கொள்ளப்பட்டு நிறை வடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த வருடம் முடிவடையும்போது வழக்கு விசாரணைகள் தாமதமடை தல் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கப் பெறும் எனவும் அமைச்சர் ஜேர் மன் தூதுவருக்கு தெளிவுபடுத்தினார்.

இலங்கையில் நீதிமன்ற நட வடிக்கை மற்றும் ஜனநாயகம் நல் லிணக்கத்தை பலப்படுத்துவதற்கு தேவையான எந்த ஒத்துழைப் பையும் வழங்குவதற்கு தயார் என இதன் போது ஜேர்மன் தூதுவர் தெரிவித்துள் ளார்.

அத்துடன் இலங்கையில் பொரு ளாதார அரசியல் நிலைமை மற்றும் மக்களின் வாழ்க்கை நிலை இயல்புநிலைக்கு வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் என்பதுடன் இலங்கை மற்றும் ஜேர்மன் நாடுகளுக்கிடையில் நீண்டகால தொடர்புகளை மேலும் அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தேவையான எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு உதவி செய்வதற்கு தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாகவும் அவர் அமைச்சரிடம் தெரிவித்திருந்தார். (ம-7)

## பயங்...

அரசாங்கத்தின் உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றத்துக்குச் சென்றுள்ளது.

"அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் சில சரத்துக்கள் அரசியலமைப்புக்கு முரணானவையாக உள்ளன.

உத்தேச சட்டத்தை நிறைவேற்ற பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவ சியமாகும்" என ஐக்கிய மக்கள் சக்தி உயர் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ள மனு வில் குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தலைமையிலான குழுவினர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதுடன், இந்த மனுவில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப் புச் சட்டத்தின் சரத்துகள் நியாயமான காரணமின்றி எந்தவொரு நபரையும் கைது செய்து காவலில் வைக்க இரா ணுவம், பொலிஸார் மற்றும் பாதுகாப் புத் தரப்பினருக்கு அதிகாரம் அளிப்ப தாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன்மூலம் அரசியல் சாசனம் அளித்துள்ள தனி மனித சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் உள்ளிட்ட அடிப் படை உரிமைகள் மீறப்படுவதால் இந்த சட்டத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத் தில் பெறப்பட வேண்டும் எனவும் மனு தாரர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2024.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 0193
B 2 4 3 4 8 8 B
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2024.01.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1397
I 52 59 69 81 I
72452

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3609
சீட்டிழுப்பு திகதி 22.01.2024
I 27 64 74 79
I 99234
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.22
சீட்டிழுப்பு இலக்கம் 0676
கன்னி 02 08 26 58 கன்னி
54663 20

மஹஜன சம்பத
திகதி 2024/01/22
சீட்டிழுப்பு இலக்கம் 5367
F 7 6 5 1 9 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1715
Y 24 05 08 27 40
31226

உத்தியோகபூர்வ முடிவுகள்
22.01.2024 வெற்றி வாரம் 075 வர்ணம் ஊதா
P 2 3 1 4 9 9
43588
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,000,279.20
DLB www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2341 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.01.22 தினம் திங்கட்கிழமை
03 08 11 23 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 68,464,692.80
79005

சனிதா
திகதி 2024.01.22 வெற்றி வாரம் 4502 வர்ணம் இளம் நீலம்
09 37 38 73 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,892,188.80
9 4 0 0 5

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4053 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.22 தினம் திங்கட்கிழமை
43 54 56 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,006,822.40
284024

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 15 14 56 64 67
1517 பச்சை 22.01.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 496,126,666.20

ஜயோதா Jayoda
திகதி 2024.01.22 வெற்றி வாரம் 1993 வர்ணம் செம்மஞ்சள்
07 16 35 67 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,581,901.20
7 8 8 5 3

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2167
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 85,580,243.20
சீட்டிழுப்பு திகதி : 2024.01.22
35 44 64 72 A
117099

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தயக்கமின்றி இராஜிநாமா கடிதங்களை ஏற்றுக்கொள்ளுங்கள்

## மின்சாரசபை நிர்வாகத்துக்கு எரிசக்தி அமைச்சர் உத்தரவு



(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் 5000 பேர் இராஜிநாமா செய்யத் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில், எவ்வித தயக்கமும் இன்றி இராஜிநாமா கடிதங்களை ஏற்றுக்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபை நிர்வாகத்திற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர உத்தரவிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எந்த ஒரு ஊழியரின் இராஜிநாமாவையும் தயக்கமின்றி ஏற்கும்படி இலங்கை மின்சாரசபை நிர்வாகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதே வேளை இராஜிநாமா செய்பவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அனைத்து பாக்கிகளையும் வசூலிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் சீர்திருத்தங்கள் தொடர்பான பணிகளை துரிதப்படுத்துமாறு மின்சாரசபை நிர்வாகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சீர்திருத்தங்களில் செலவு குறைப்பு வழிமுறைகள், உற்பத்தித் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மின் திட்டங்களை செயல்படுத்துதல், டிஜிட்டல் கட்டண தளத்தை விரிவுபடுத்துதல் என்பன உள்ளடங்குகின்றன.

இம் மாதம் இடம்பெற்ற அடையாள வேலைநிறுத்தத்தின்போது இலங்கை மின்சார சபையின் சேவைகளுக்கு இடையூறு விளைவித்த பணியாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், சுமார் 5,000 மின்சாரசபை ஊழியர்கள் ஒரே நேரத்தில் இராஜிநாமா செய்யத் தயாராகி வருகின்றனர் என்று வெளியாகியுள்ள செய்தியின் அடிப்படையில் அமைச்சரால் இந்த புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

ஊழியர்களை அடக்குவதற்கு அமைச்சின் முயற்சிக்கு எதிராக மின்சாரசபை தொழிற்சங்கக் கூட்டமைப்பு இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

---

இராமர் கோவில் கும்பாபிஷேகம்

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலும் சிறப்பு பூசை வழிபாடுகள்

பல்வேறு சிறப்பம்சங்களுக்கு மத்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அயோத்தி இராமர் கோவிலின் கும்பாபிஷேகம் நேற்று மதியம் 12.20 க்கு கோலாகலமாக இடம்பெற்றது.

இதனை முன்னிட்டு இலங்கையின் பல்வேறு ஆலயங்களிலும் நேற்றைய தினம் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

அந்தவகையில், யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திலும் சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

சுதர்சன ஈஸ்வரக் குருக்கள் கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியர்கள் இணைந்து காலை பத்து மணியளவில் இராமருக்கான ஸ்நபனம் அபிஷேகம் இடம்பெற்றதுடன் விசேட அபிஷேக பூசைகளும் இடம்பெற்றன.

இதில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணை தூதரக அதிகாரிகள் வல்லிபுர ஆழ்வார் பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

---

## அரசியல்...

கொழும்பில் உள்ள இந்தியன் இல்லத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதிநிதிகள் ஆகியோருக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பு நடைபெற்றது.

இதன்போதே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை, வடக்கு, கிழக்கு மீளிணைக்கப்பட வேண்டும், அதிகாரம் பகிரப்பட்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், தேர்தல் நடத்தப்படாவிட்டால், திரும்பத் திரும்ப நாம் உங்களிடம் இப்படி முறையிட்டுக் கொண்டிருப்பதை விட வேறு வழியில்லை என்று தமிழ்த் தரப்புக்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவில் மகாவலி திட்டத்தின் கீழ் தமிழ் மக்களின் பூர்வீக நிலத்தில் 600 சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்தத் திட்டமிடப்படுகின்றது. திருகோணமலையில் மெகா சிட்டி திட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறி இந்தியாவைத் தவிர்த்து பிற நாடுகளை உள்ளீர்க்கும் முயற்சி நடக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை பெரும்பான்மை இனத்தவர்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட பல விடயங்களைத் தமிழ்த் தரப்புக்கள், புதிய இந்தியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டின.

இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள சமயத்தில் இந்தியா நிதி உதவி வழங்கியது. தற்போது தேர்தல் நடத்தப் பணமில்லை என்று அரசு கூறுகின்றது. தேர்தலை நடத்த இந்தியா பணம் வழங்கலாம்" என்றும் தமிழ்க் கட்சிகள் யோசனை முன்வைத்தார்கள்.

இந்தியத் தூதுவர் மேற்படி விடயங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அபிவிருத்தித் திட்டங்களுடன், அரசியல் தீர்வையே இந்தியா இலக்காகக் கொண்டுள்ளது என்று தூதுவர் தெரிவித்தார். இந்தியாவிலிருந்து கடலடி மார்க்கத்தில் மின்சாரம் கொண்டு வரும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு மீளிணைப்பு, தேர்தல், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விவகாரங்களில் இந்தியா இன்னும் அதிக வகிபாகத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் வலியுறுத்தின.

இதற்குப் பதிலளித்த இந்தியத் தூதுவர், இந்தியாவும், சர்வதேசமும் இலங்கையிடம் இவற்றைச் சொல்லத்தான் முடியும். இந்தியா தொடர்ந்து இதை வலியுறுத்தி வருகின்றது. ரணில் விக்கிரமசிங்க இந்தியா வந்தபோது, பிரதமர் நரேந்திர மோடி மூடிய அறைக்குள் இந்த விடயங்களை வலியுறுத்தினார். பின்னர் பகிரங்கமாகவும் சொன்னார். இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தும் எனவும் தெரிவித்தார்.

இந்தியத் தூதுவருடனான சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சி.சிறீதரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா. சாணக்கியன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , கோவிந்தன் கருணாகரம், சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-7)

---

## தனுஷ்கோடி - மன்னார் இடையே புதிய பாலம்?

(கொழும்பு)

அயோத்தியில் இராமர் கோயில் திறக்கப்பட்டதை அடுத்து, தனுஷ்கோடியையும், இலங்கையின் மன்னாரையும் இணைக்கும் புதிய கடல் பாலம் தொடர்பில் இந்திய மத்திய அரசு திட்டமிடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி இந்தியாவின் - தனுஷ்கோடியை இலங்கையுடன் இணைக்கும் கடல் பாலம் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு விரைவுபடுத்த உள்ளதாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இராமர் தமது படையினை இலங்கைக்கு அழைத்துச் செல்ல இந்த தனுஷ்கோடியில் இருந்து தான் ஹனுமானுக்கு உத்தரவிட்டு இருந்ததாக இராமாயணத்தில் கூறப்படுகின்றது.

இந்தநிலையில் தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னார் வரை பாலம் அமைக்க இந்திய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கமைய சுமார் 23 கிலோமீற்றர் நீளமுள்ள பாலத்தை அமைப்பதற்கான சாத்தியக்கூறு தொடர்பில், இந்திய மத்திய அரசு விரைவில் ஆராய உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை மாதம் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க டெல்லி சென்றிருந்த போது, குறித்த திட்டம் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நீண்ட கடல் பாலத்திற்கு பெரும் நிதி தேவைப் படும் என்றாலும், இந்தத் திட்டத்தால் இரண்டு நாடுகளும் மிகப் பெரியளவில் பயன்களை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தநிலையில், இரு நாடுகளையும் இணைக்கும் வகையிலான பாலத்தை அமைக்க முடியுமா என்பதைப் பற்றி அரசு தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அம்சங்களை மதிப்பீடு செய்ய வேண்டும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இரண்டு நாடுகளைக் கடல் பாலம் மூலம் இணைக்க வேண்டும் என்பது குறித்து கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாகவே கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சன சமூக நிலையத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான தமிழ் மரபியல் பொங்கல் விழாவினை முன்னிட்டு, எமது சன சமூக நிலைய முன்னாள் உறுப்பினர் அமரர் சிங்கராஜா ஜெகதீஸ்குமார்(தீசன்) ஞாபகார்த்த ஆண், பெண் இருபாலாருக்குமான

மரதன் ஓட்டப் போட்டிகள்

காலம் : 28.01.2024

ஞாயிற்றுக்கிழமை, காலை 6.00 மணிக்கு

ஆரம்பிக்கும் இடம் : யா/செங்குந்த இந்துக் கல்லூரி மைதானம் அமரர் வைத்திய கலாநிதி இரத்தினசபாபதி பாக்கியநாதன் அவர்கள் நினைவுத்திடல்

பதிவுகளுக்கு : 077 482 1969, 077 993 4252

பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்

நிர்வாகம்,
வாலை அம்மன் சனசமூக நிலையம்

(18729)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18721)

076 825 7716 (ஆகாஸ்)

குத்தகைக்கு

இயங்கி கொண்டிருக்கும் பேக்கரி குத்தகைக்கு விடப்படும்.

புதிய துர்க்கா வெதுப்பகம் கலைவாணி வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(18727)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8189)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.